# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1970 - 2016 ජූනි මස 03 වැනි සිකුරාදා - 2016.06.03

*1970 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 768 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 771 |


**கவனிக்க.**- பல்கலைக்கழகங்கள் (திருத்தம்) சட்டமூலம் 2016, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, யூன் மாதம் 10 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதி அமைச்சு

### கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் செயலாளர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2016

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தில் நிலவுகின்ற வெற்றிடத் திற்காக தகுதியான ஒருவரைத் தெரிவுசெய்துகொள்வதற்காக அமைச்சரவையின் பணிப்பின் பேரில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைவாக தயார்செய்யப்பட்ட விண்ணப் பங்கள் பின்வரும் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ "செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, கொழும்பு 12" என்னும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவு அஞ்சலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் செயலாளர் பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல்" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2016.07.01 ஆகும்.

**குறிப்பு**.- விண்ணப்பமொன்று அல்லது அது சம்பந்தப்பட்ட ஆவணமொன்று அஞ்சலில் காணாமற் போனதாக அல்லது தாமதமாகியதாக செய்யப்படுகின்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதம் செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டங்கள் விண்ணப்பதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

1. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை**.- அமைச்சர வையின் அங்கீகாரத்தின்படி நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற புள்ளிகளின் மீது தெரிவுசெய்யப் படும். நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அமைச்சரவையின் கட்டளைப்படி தீர்மானிக்கப்படுகின்றது.

2. **சேவை நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானது.

(ii) இப்பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர் 3 வருட தகுதிகாண் காலமொன்றுக்கு உட்படு வதுடன், அந்த 3 வருட காலத்துள் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 01/ 2014 மற்றும் அதற்கு நேரொத்த சுற்றறிக்கைகளின்படி மொழி பற்றிய தேர்ச்சி மட்டத்தை 5 வருட காலத்துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச கரும மொழி யல்லாத மொழி மூலமொன்றில் சேவையில் சேர்ந்த உத்தியோகத்தர்களால் 3 வருட காலத்துள் அரச கரும மொழியொன்று பற்றிய தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுடன், மற்றைய அரச கரும மொழி பற்றிய தேர்ச்சியை 5 வருடத் துக்குள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(iv) அமைச்சரவையின் தீர்மானங்களுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங் கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் திணைக்கள ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்படும்.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்கு 3/ 2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின்படி எஸ்எல்-1-2016, ரூபா 47,615 - 10 x 1,335 - 8 x 1,630 - 17 x 2,170 - ரூபா 1,10,895 மாதாந்த சம்பள அளவுத் திட்டமொன்று உரித்தாகிறது. தரங்கள் முறைக்கு சம்பந்தப்பட்ட ஆரம்ப சம்பள அளவுத்திட்டம் (76,175 ரூபா) என்பதுடன் சம்பளப் படிநிலை 20 ஆகும். (2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கை இல. 03/ 2016 இன் ஏற்பாடுகளுக்கமைவாக அதன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பளம் உரித்தாகிறது.)

4. **தகைமைகள்** :

(i) **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் படிப்பு பெற்றிருத்தல் வேண்டும்.

(ii) **தொழில் தகைமைகள்**.- உயர் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவராக 15 வருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **அனுபவம்**.- ஏற்புடையதாகாது.

5. **வயதெல்லை**.- ஆகக்குறைந்த வயது 35 வருடங்கள். ஆகக்கூடிய வயது 50 வருடங்கள். (ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவராயின் வயதெல்லை ஏற்புடையதாகாது.)

6. **உடற் தகைமைகள்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியில் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

7. **பிற தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ii) விண்ணப்பதாரர் சிறந்த நல்லொழுக்கம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காகத் தேவையான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்ய வேண்டுமென விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற அறிவித்தலில்/ வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தில் அத்தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

8. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.-** அமைச்சரவையின் தீர்மானத்தின் மீது நியமிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சைச் சபையினால் நடாத்தப்படுகின்ற கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப் படுவதுடன் அப்பரீட்சையின் போதே தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

9. **நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| | புள்ளிகள் வழங்கப்பட வேண்டிய துறைகள் | மொத்தப் புள்ளிகள் | சித்தியடையத் தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் | 45 | ஏற்புடையதாகாது |
| 2 | உள்நாட்டு/ வெளி நாட்டுப் பயிற்சிகள் | 20 | |
| 3 | மேலதிக அனுபவம் | 30 | |
| 4 | நேர்முகப் பரீட்சை சபையின் தற்றுணிபின்படி தலைமைத்துவம், ஆளுமை மற்றும் தொலைத் தொடர்புத் திறன்கள் | 05 | |
| | மொத்தம் | 100 | |

10. (i) விண்ணப்பம் 22 x 29 செ. மீ. அளவிலான A4 தாளில் தயார்செய்யப்பட வேண்டுமென்பதுடன் 1 தொடக்கம் 14 வரையிலான தலைப்புக்கள் முதலாம் பக்கத்திலும், 15 தொடக்கம் இறுதி வரையிலான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் தயார் செய்யப்படுதல் வேண்டும். அதற்கான தகவல்களை தனது கையெழுத்தினாலேயே தெளிவாக உள்ளடக்க வேண்டும். சகல விதத்திலும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாதுள்ள, அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிராத உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக இல்லாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும். மேலும் பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைந்ததாக உள்ளதா என விண்ணப்பதாரரால் பரீட்சித்துப் பார்க்க வேண்டுமெனவும் அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பம் நிராகரிக்கப்படுமெனவும் அறிவித்துக்கொள்கிறேன். விண்ணப்பங்கள் இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக தயார்செய்ய வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது.

**குறிப்பு :**

(அ) விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணமும் அல்லது அதன் பிரதிகள் இணைத்தலாகாது ;

(ஆ) வேண்டப்படும்போது ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(ii) அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது திணைக்கள/நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

11. அமைச்சரவையினால் வழங்கப்படுகின்ற கட்டளைகள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள் காலத்துக்குக்காலம் அரசாங்க சேவை தொடர்பில் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் கடன் இணைக்க சபைத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் நிபந்தனைகள் இப்பதவிக்கு ஏற்புடையதாகின்றன.

அமைச்சரவையின் பணிப்பின் பேரில்,

பத்மசிறி ஜயமான்ன,
செயலாளர்,
நீதி அமைச்சு.

2016, ஏப்பிறல் 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி அமைச்சு**

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின் I ஆம் தரத்தின் செயலாளர் பதவி (திறந்த)

| |
|---|
| இல. ........................................ |
| (அலுவலக உபயோகத்துக்காக) |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) : ----.

முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) : ----.

(ஆ) முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.
முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

2. நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :----.

3. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்தில்) :----.

4. தொலைபேசி இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

5. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. ஆணா/ பெண்ணா என்பது :----.

7. பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

8. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

9. தேசிய இனம் :----.

10. விவாகமானவரா/ விவாகமாகாதவரா என்பது :----.

11. பட்டப் பின்படிப்பு பற்றிய விபரம் :
பல்கலைக்கழகம் :----.
விடயத்துறை :----.
பட்டம் வழங்கப்பட்ட திகதி :----.
மொழி மூலம் :----.

12. சட்டத்தரணி ஒருவராக சத்தியப்பிரமாணம் செய்த திகதி : ----.

13. சட்டத்தரணி ஒருவராக தொழில் அனுபவம் :
---- வருடங்கள்.

14. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 4 ஆம் பந்தியின்படி தகைமைகள் :

(i) ------------------------------------------------.
(ii) ------------------------------------------------.
(iii) ------------------------------------------------.
(iv) ------------------------------------------------.
(v) ------------------------------------------------.

15. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலின் 9 ஆம் பந்தியின்படி தொழில் தகைமைகள் :

(i) ------------------------------------------------.
(ii) ------------------------------------------------.
(iii) ------------------------------------------------.
(iv) ------------------------------------------------.
(v) ------------------------------------------------.

16. மொழித் தேர்ச்சி (ஏற்புடையதான கூட்டினுள் ✓ அடையாளத்தை இடுக.)

| | மிகவும் நன்று | நன்று | சாதாரணம் | குறைவு |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

விண்ணப்பதாரரின் உறுதியுரை :

.................................................... ஆகிய நான் இதில் குறிப்பிட்டுள்ள சகல தகவல்களும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்பட்டு அல்லது வினைத் திறமையின்மையின் மீது சேவையிலிருந்து ஓய்வுபெறச் செய்யப்படவில்லை எனவும், பதவிகளைக் கைவிட்டுச் சென்ற ஒருவராகக் கருதப்படவில்லை எனவும் உறுதிகூறுகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எதுவும் பொய்யானவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து தகுதியற்றவனாவேன் எனவும், தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் தெரியவருமிடத்து நட்டஈடு எதுவுமின்றி தொழிலிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்காக
திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................................................... தற்போது இவ்வமைச்சில்/ திணைக்களத்தில் .............................. நிரந்தர/ தற்காலிக/ அமய ................................ ஒருவராக சேவை செய்கின்றார் எனவும், அவர் இப்பதவிக்காகத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது என்றும் அறிவித்துக்கொள்கிறேன்.

----,
அமைச்சின் செயலாளரின்/ திணைக்களத்
தலைவரின் கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :----.
பதவி :----.
அமைச்சு/ திணைக்களம் :----.
திகதி :----.

6-131

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2016*

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் மாணவ தாதியர் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்வதற்கு 1837/8 ஆம் இலக்க 2013.11.19 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை தாதியர் சேவை பிரமாணக் குறிப்பில் மற்றும் அதன் காலத்திற்குக்காலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிமுறைகளுக்கு அமைய இந்த அமைச்சின்கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகளின் அவசியத்திற்கேற்ப ஆண் விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவர்).

1. இதன்போது நாடளாவிய ரீதியில் இணைத்துக்கொள்ளும் மொத்த எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையை அடிப்படையாகக் கொண்டு மக்களின் விகிதாசாரத்திற்கு பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

அதன் பின் ஒவ்வொரு மாவட்டத்திற்கு இணைத்துக்கொள்ள வேண்டிய எண்ணிக்கைக்கு உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடமும் விண்ணப்பங்கள் கோரி, நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியானவர்களை விகிதாசார அடிப்படையில் பிரித்து உரிய மாவட்டத்தில் ஒவ்வொரு வருடத்திற்கும் இணைத்துக்கொள்ளும் தொகை தீர்மானிக்கப்படும்.

அதன் பின்னர் ஒவ்வொரு வருடத்திலும் இணைத்துக் கொள்ள வேண்டிய தொகை அந்த வருடத்தின் உயிரியல் விஞ்ஞானத்துறை மற்றும் பௌதீக விஞ்ஞானத் துறையின்கீழ் விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியான விண்ணப்பதாரிகள் விகிதாசார அடிப்படையில் பிரித்து உரிய மாவட்டத்தினாலும் ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய ஒவ்வொரு துறையின் கீழும் இணைத்துக்கொள்ள வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

அவ்வாறு ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு துறையின்கீழ் இணைத்துக்கொள்ள வேண்டிய தொகையைத் தீர்மானித்து அந்த தொகையில் 5% ஆண் விண்ணப்பதாரிகளும், 95% பெண் விண்ணப்பதாரிகளும் உள்ளடங்கும் வகையில் ஒவ்வொரு வருடத்திலும் ஒவ்வொரு துறையின் கீழும் மாவட்டத்தின் அதிகூடிய Z புள்ளிகயைப் பெற்ற விண்ணப்பதாரிகளில் இருந்து பயிற்சிக்காக தெரிவுசெய்யப்படுவர்.

2. இப்பாடநெறி முழுநேரப் பாடநெறியாகும். ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் அல்லது அரச நிறுவனம் ஒன்றில் வேறு ஏதாவது நிறுவனமொன்றில் முழுநேர கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் இதற்காக விண்ணப்பித்து பின்னர் ஏதாவது சந்தர்ப்பத்தில் தெரியவருமிடத்து அவரை கற்கைநெறியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசினால் அவருக்காக செலவிட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிட மிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழுநேர கற்கை நெறியைத் தொடரும் ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் பின்வரும் முறைகளைப் பின்பற்றப்படல் வேண்டும் :-

2.1 2016.06.24 ஆந் திகதி ஆகும்போது நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழுநேர கற்கைநெறிக்காக பதிவுசெய்திருப்பின் மாணவ தாதியர் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்படுமிடத்து தாதியர் பயிற்சிக்கு தாதியர் பாடசாலையில் பதிவுசெய்வதற்கு முன்னர் பயிற்சியை அல்லது கற்கைநெறியின் பதிவை இரத்துச்செய்துகொள்ள வேண்டும்.

2.2 2016.06.24 ஆந் திகதிக்கு பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நடாத்தப்படும் கற்கைநெறிகளிலோ பதிவுசெய்யாதவராக இருப்பின் தாதியர் பயிற்சிப் பயிலுநர் பதிவுசெய்யும் திகதியாகும்போது பதிவுசெய்திருப்பின், அவர்களும் தாதியர் பயிற்சிக்கான பதிவை மேற்கொள்ள முன்னர் அந்த கற்கைநெறியின் பதிவை இரத்துச் செய்துகொள்ள வேண்டும்.

2.3 சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின்கீழ் நடாத்தப்படும் முழுநேரப் பயிற்சி நெறியில் பதிவுசெய்துள்ள விண்ணப்பதாரராயின், அவர்களும் மாணவ தாதியர் பயிற்சிக்காக தெரிவுசெய்யப்பட்டால் அதுவரை பெற்றுக்கொண்டு இருந்த பயிற்சிக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் குறிப்பிடப்பட்டுள்ள நிதி மற்றும் அதுவரையிலும் பெற்றுக்கொண்ட சகல கொடுப்பனவுகள் என்பவற்றைச் செலுத்தி உரிய பயற்சியிலிருந்து நீங்கிக் கொண்டால் மாத்திரமே மாணவர் தாதியர் பயிற்சிக்காக பதிவுசெய்யப்படுவர்.

**கவனத்திற்கொள்ள வேண்டியவை :**

(1) மேற்குறிப்பிடப்பட்ட 2.1 இல் இருந்து 2.3 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தைப் பெறாதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற் சிக்குத் தகுதியற்றவராகக் கருதப்படுவீர்கள்.

(2) மேலும், நீங்கள் போதியளவு Z பெறுமானத்தைப் பெற்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்திசெய்திருப்பினும் 2.1 இல் இருந்து 2.3 வரை குறிப்பிடப் பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாதவிடத்து, எவ்விதத்திலும் பயிற்சிக்காக பதிவுசெய்யப்பட மாட்டீர்கள்.

3. **கல்வித் தகைமைகள்**.- (அ) 2014 அல்லது 2015 ஆம் ஆண்டுகளில் ஏதாவது ஓர் ஆண்டில் க. பொ. த (உ. த.) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞான துறைக்குரிய உயிரியல், இரசாயனவியல், விவசாயவியல், பௌதிகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் 3 இல் தோற்றி அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)

அல்லது

க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறைக்குரிய இணைந்த கணிதம், இரசாயனவியல், பௌதீகவியல் மற்றும் உயர் கணிதம் ஆகிய பாடங்களில் 3 இல் தோற்றி அனைத்துப் பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த)

மற்றும்

(ஆ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்கள மொழி/ தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. **ஏனைய தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) 2016.06.24 ஆந் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(இ) உயரம் : 4 அடி 10 அங்குலத்திற்கு (147.3 cm) குறையாதிருத்தல்.

(ஈ) திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

(உ) நாட்டின் எப்பாகத்திலும் தாதி உத்தியோகத்தராக சேவையாற்றக்கூடிய உடற்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஊ) பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உடற்தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரி நல்லொழுக்கம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(ஏ) ஆண்/ பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்கலாம்.

(ஐ) தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் விண்ணப்ப முடிவுத் திகதியான 2016.06.24 ஆந் திகதிக்கு கிட்டிய 3 வருடங்கள் தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். தமது வதிவை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒன்றைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதுடன், குறித்த ஆவணங்கள் நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும் :

(i) 2016.06.24 ஆந் திகதிக்கு கிட்டிய முன்னைய 3 வருடங்களுக்குள் அவர் அம்மாவட்டத்தில் 3 வருடங் களாவது தொடர்ந்து வசித்து இருக்க வேண்டும். (இங்கு பிரதேச செயலாளரது மேலொப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

(ii) மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் கிட்டிய 3 வருடத்திற்குரிய வாக்காளர் பெயர்ப் பதிவேட்டின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) இந்த அறிவித்தலின் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ4 அளவுத் தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பங்களைத் தயாரித்தல் வேண்டும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள இலக்கம் 1 முதல் இலக்கம் 9 வரை முதல் பக்கத்திலும் 9 தொடக்கம் 11 வரை இரண்டாம் பக்கத்திலும், 11 தொடக்கம் 13 வரை மூன்றாம் பக்கத்திலும் இருக்கும் வகையில் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். மேலும் விண்ணப்பப்படிவத்தின் வலது பக்க மேல் மூலையிலுள்ள பெட்டியினுள் உரிய தகவல்களைக் கட்டாயமாக நிரப்ப வேண்டும்.

**குறிப்பு**.- மேலே (3) மற்றும் (4) இன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்ட இறுதித் திகதியான 2016.06.24 ஆந் திகதிக்கு சகல விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தை உரிய முறையில் பூர்த்திசெய்து கடித உறையினுள் இட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் "மாணவ தாதியர் பயிற்சிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2016" மற்றும் வசிக்கும் மாவட்டத்தையும் குறிப்பிட்டு 2016.06.24 ஆந் திகதிக்கு முன்னர் "பணிப்பாளர் 01 (நிர்வாகம்), சுகாதார அமைச்சு, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அனுப்ப வேண்டும்.

(இ) இலங்கை நிர்வாக சேவையில்/ கல்வி சேவையில்/ அரசாங்கத்தின் கணக்காளர் சேவையில்/ அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/ சமாதான நீதவான்/ சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்தம் 2,40,360 ரூபாவிற்குக் குறையாத சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரிகள் 300 ரூபாவினை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் 7041318 எனும் சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் பரீட்சைக் கட்டணம் சேகரிப்பு கணக்கிலக்கத்துக்கு சேரும்படி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை மாதிரி விண்ணப்பப்படிவத்தில் பெட்டியினுள் கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். இந்தக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீண்டும் திருப்பித்தரப்பட மாட்டாது என்பதுடன், வேறு பரீட்சைகளுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

6. பூரணப்படுத்தப்படாத, மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு முரணான, அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்திராத, பற்றுச்சீட்டு ஒட்டப்படாத மற்றும் 2016.06.24 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுசெய்யப்படாத விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும் என்பதுடன், விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றதாகவும் அறிவிக்கப்பட மாட்டாது.

7. மேல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகளின் Z பெறுமானத்திற்கு அமைய முன்னுரிமை அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற நேர்முகச் சபையினால் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு தாதியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பரீட்சிக்கப்படுவதுடன், உடற்தகைமைகளும் பரீட்சிக்கப்படும்.

**குறிப்பு** :

(அ) தாதியர் பாடசாலைகளில் நிலவுகின்ற இடவசதி மற்றும் சேவைத் தேவைப்பாட்டின் பிரகாரம் இணைத்துக் கொள்ள வேண்டிய தொகை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட வேண்டிய எண்ணிக்கை தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானம் ஆகும் ;

(ஆ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்ற சகலரும் பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர் என இங்கு உள்வாங்கப்பட்ட எந்தப் பகுதியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும் ;

(இ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகுதியுள்ள மற்றும் தகுதியற்ற விண்ணப்பதாரிகள் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட, தெரிவுசெய்யப்படாத விண்ணப்பதாரிகளின் விபரங்கள் www.health.gov.lk இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் யாருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படமாட்டாது.

8. நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் மற்றும் அவற்றில் தம்மால் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், பின்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது :

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;

(ஆ) க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் ;

(இ) க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ் ;

(ஈ) தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ;

(உ) மேலே 4 (ஊ) இல் குறிப்பிடப்பட்டுள்ள வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான ஆவணம் ;

(ஊ) விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக் கடதாசி.

**குறிப்பு**.- மேற்படி அ, ஆ, இ, ஈ இன் கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள சான்றிதழ்கள் உண்மையானவை என தம்மால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட பிரதியை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டும்.

9. **பயிற்சித் திட்டம்**.- (அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்ப தாரர்கள் மாணவ ஆண்/ பெண் தாதியர்களாக தாதியர் பயிற்சிப் பாடசாலைக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், அவர்கள் 3 ஆண்டுகள் பயிற்சிக் கற்கைநெறியை அவர்கள் கற்றல் வேண்டும்.

(ஆ) பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளப்படும் பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறை களுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(இ) பயிற்சிக் காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறும் அல்லது அவர்களின் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது தமது பயிற்சிப் பாடசாலையினது பரீட்சை மற்றும் லீவு நிபந்தனைகளுக்கு அமையத் தவறும் அல்லது பயிற்சிக்கு இணைத்துக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகளில் ஏதாவது பொய் அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றி பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர். பயிற்சிக் காலத்தில் பயிலுனர்களுக்கு விடுமுறைகள் எதுவும் உரித்தில்லை என்பதுடன், அக்காலத்தினுள் வரவின்மைக்காக விசேட கொடுப்பனவில் இருந்து விகிதாசார அடிப்படையில் ஒரு தொகை கழிக்கப்படும். அத்துடன் பரீட்சை எழுதுவதற்கு 80% இற்குக் குறையாத வரவு இருத்தல் கட்டாயமானதாகும்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் பொது நிருவாக சுற்றறிக்கை 03/ 2016 இன் நியதிகளுக்கு அமைய மாணவ தாதியர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

(உ) பயிற்சியின்போது பயிற்சியிலிருந்து விலகினால் அல்லது பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால் ஒப்பந்தப் பணம், பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் பயிற்சிக்காக செலவிடப்பட்ட செலவுகள் அவரினால் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

10. **விவாகமாகாத நிபந்தனைகளும் உடன்படிக்கைகளும்.**- (அ) சகல விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்களை அனுப்பும் திகதியில் விவாகமாகாதவர்களாக இருக்க வேண்டும் என்பதுடன், பயிற்சிக்காலத்திலும் விவாகமாகாதிருத்தல் கட்டாயமாகும். அதனை உறுதிப்படுத்த சமாதான நீதவான் முன்னிலையில் கையொப்பமிடப்பட்ட சத்தியக்கடதாசியொன்று நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) தாதியர் பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்தப் பயிற்சியை முழுமையாக நிறைவுசெய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சில் அல்லது மாகாண அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகளில் சேவையாற்றுவதாகவும், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் இந்தக் கால எல்லை அவ்வப்போது வரையறுக்கப்படும்.

11. **சேவையில் ஈடுபடும் நியதிகள்.**- (அ) சகல பயிலுநர்களும் பயிற்சி ஆரம்பிக்க முன்பு மருத்துவ பரிசோதனை செய்துகொள்ள வேண்டும்.

(ஆ) பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொறுப்பு ஏற்காது. மூன்று வருட பயிற்சியை சிறப்பாக நிறைவுசெய்து இறுதிப் பரீட்சையில் தேர்ச்சி பெறும் மாணவ தாதி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசாங்கம் உத்தேசித்தால் அவர்களை 2016.02.25 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை 03/ 2016 இன்படி MT 07-2016 இற்கு அமைவாக தாதி உத்தியோகத்தர்கள் தரம் III இன் பதவிநிலை தாதியர் பதவிகளுக்கு நிலவும் வெற்றிடங்களின்படி நியமிக்கப்படும்.

(இ) தாதியர் சேவையில் சகல உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை விதிமுறைகள், அரச சேவை ஆணைக் குழுவினால் அரச சேவைகள் தொடர்பாக விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் சட்டதிட்டங்களுக்கும், தாதியர் சேவை பிரமாணக் குறிப்பின் நியதிகளுக்கும், அரச நிதிப்பிரமாணத்திற்கும், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றில் காலத்திற்குக்காலம் ஏற்படுத்தக்கூடிய திருத்தங்கள் என்பவற்றுக்கு கட்டுப்படல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பத்தை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் உள்ளடக்கவும். பயிற்சிக்காக இணைத்துக்கொள்ளும்போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபணமாகினால், சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்யப்பட்டு பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதோடு அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதுடன், மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கறுப்புப்பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படுவதுடன், பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செலவினங்கள் மற்றும் ஒப்பந்தப் பணம் அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(உ) பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படுபவர்களுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்குவதற்கு இவ்வமைச்சு கட்டுப்படவில்லை.

(ஊ) இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுதல் தொடர்பாக உரிமைகள் ஏதும் இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக தெரியவரின் பயிற்சியில் இருந்து நீக்கப்படும் அல்லது வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(எ) பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளல் தொடர்பாக இந்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் உள்வாங்கப்பட்ட அல்லது உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

அனுர ஜயவிக்கிரம,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச
வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும்
சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிரிபாய",
இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2016, மே 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

*மாணவ தாதியர் பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு - 2016*

| | |
|---|---|
| மாவட்டம் | |
| உயர்தர பாடத்துறை | |
| உயர் தரம் சித்தியடைந்த வருடம் | |
| மொழி மூலம் | |

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

(ஆ) முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(இ) முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ----.

2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) :----.

3. (i) நிரந்தர முகவரி (தமிழில்) :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(ii) நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

(iii) தொலைபேசி இலக்கம் :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கையடக்க | | | | | | | | | | |
| நிரந்தர | | | | | | | | | | |

4. பிறந்த திகதி :-

ஆண்டு :---- மாதம் :---- திகதி :----.

5. 2016.06.24 ஆந் திகதியன்று வயது :-

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

6. பால் (ஆண்/ பெண்) :

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

7. நீங்கள் இலங்கைப் பிரசையா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக.)

8. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

9. உயரம் :- அடி :-----, அங்குலம் :-----. /சென்ரி மீற்றரில் : -----.

10. (அ) கல்விப் பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சை

வருடம் :-----. சுட்டெண் :-----.

Z பெறுமதி :-----, பாடநெறி :-----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சை :

முதலாம் அமர்வு :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. கணிதம் | | |
| 2. விஞ்ஞானம் | | |
| 3. தமிழ் | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

இரண்டாம் அமர்வு :

(i) பரீட்சை வருடமும் மாதமும் :----.
(ii) சுட்டிலக்கம் :----.

| பாடங்கள் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1. கணிதம் | | |
| 2. விஞ்ஞானம் | | |
| 3. தமிழ் | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |
| 10. | | |

11. ஏதாவது குற்றச்செயலுக்காக நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா? :-

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டில் "✓" அடையாளம் இடுக)

ஆம் எனில், தயவுசெய்து காரணத்தைக் குறிப்பிடுக : .....................

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானதும் சரியானதுமாகும்.

(ஆ) என்னால் கொடுக்கப்பட்ட உறுதியுரை பிழையென பின்னர் தெரியவரின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் என நன்கு அறிவேன்.

| |
|---|
| ரூபா 300 பணம் செலுத்திய பற்றுச்சீட்டை இங்கு ஒட்டவும். |

------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த ................................. எனக்கு தனிப்பட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில் ................................. ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

6-186

---

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

*2016 ஆம் ஆண்டின் இரண்டாம் அரை ஆண்டிற்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்ளுவதற்கான அனுமதி*

*இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நாடு பூராகவுமுள்ள தேசியதொழிற்பயிற்சி நிலையங்கள், மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படும் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி சம்பந்தமாக 2016 ஆம் ஆண்டிற்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறும் NVQ (தேசிய தொழிற் தகைமை) பாடநெறி, NVQ அல்லாத பாடநெறி குறியீட்டு இலக்க அடிப்படையில் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது. NVQ மட்டம், பாடநெறி காலம், பாடநெறி கட்டணம் என்பன குறிக்கப்பட்டுள்ளன.*

பாடநெறி சம்பந்தமாக அனுமதி.- மாவட்ட மட்டத்தில், தேசிய தொழிற் பயிற்சி நிலையங்களின் முகவரி, பாடநெறிகள் குறியீட்டு இலக்க அடிப்படையில் கீழ்வருமாறு காணப்படுமிடத்து தாங்கள் விரும்பும் பாடநெறியினை தெரிவு செய்து குறிக்கப்பட்ட மாவட்ட/ தேசிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பதிவுத்தபாலில் விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்கவும். இத்தோடு முன்வைக்கப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 13" x 8" அளவில் அனுப்பி வைக்கவும். தாங்களால் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் "பயிலுநர் இணைத்துக்கொள்ளல் - 2016 II" விண்ணப்பப்படிவம் எனக் குறிக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | - | 2016, யூன் 24 ஆந் திகதி, வெள்ளிக்கிழமைக்கு முன்பு |
| பாடநெறி ஆரம்பம் | - | 2016, யூலை 04 |
| மேலதிக விபரங்களுக்கு : | | |
| தொலைபேசி இலக்கம் | - | 011-7270270 |
| | - | 011-2352160 |
| | - | 011-2352185 |
| தொலைநகல் | - | 011-2502342 |
| மின்னஞ்சல் முகவரி | - | cgjp@vtasl.gov.lk |
| இணையத்தளம் | - | www.vtasl.com |
| முகப்புத்தகப் பகுதி | - | www.facebook.com/vtasl |

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை,
4ஆம் மாடி ,
"நிபுணதா பியச",
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

பயிற்சியுடன் உங்களுக்கு :

* தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி (CBT) கீழ் பயிற்சியினை தொடர்தல்.
* தேசிய தராதரமட்டத்திலான (NVQ) சான்றிதழ் மட்டம் 3, 4 பெற்ற பின் டிப்ளோமா, உயர் டிப்ளோமா உடன் தொழில்நுட்ப உயர்பட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பம்.
* விசேடமாக சில பாடநெறிகளுக்கு மாதம் 1,000/- இலிருந்து 2,000/- வரை உதவுத்தொகை.
* குறைந்த கட்டணத்திலான (இ.போ.ச.) பருவச்சீட்டு
* பயிற்சி சேவைகளும், ஆங்கில பயிற்சியும்
* தொழில் வழிகாட்டல் சேவைகள்
* பயிற்சி சம்பந்தமான மேலதிக அறிவு
* இலவச காப்புறுதி
* இலவச சீருடை

பயிற்சியின் பின் உங்களுக்கு :

* மாதாந்த உதவித் தொகையுடன் மேலதிக பயிற்சி
* அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
* வெளிநாட்டு வேலைக்கு போகக்கூடிய வாய்ப்பு
* சுயதொழில் வாய்ப்புக்கள்
* சிறிய, மத்திய அளவிலான வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளும், கடன் வசதிகளும் பெற்றுக்கொடுத்தல்.

* வியாபார சம்பந்தமான ஆலோசனை சேவைகள் பெற்றுக்கொடுத்தல்.
* குறிக்கப்பட்ட பாடநெறியில் அதிகூடிய திறனை பெறுதல்.
* தொழில் கல்வியில் தொழில் நுட்பப் பட்டம் பெறுதல்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை**

இரண்டாம் அரையாண்டுக்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2016

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. வதிவிடம் :
4. தொலைபேசி இலக்கம் :----.
5. பிறந்த திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை :----.
7. பெற்றுக்கொண்டுள்ள ஆகக்கூடிய கல்வி தகைமை :----.

உங்களது கல்வித்தகைமைக்கு ஏற்ப இணைந்து கொள்ள விரும்பும் பாடநெறி மற்றும் அவற்றை தொடர விரும்பும் பயிற்சி நிலையங்களை ஒழுங்காக குறிப்பிடுக :

| பாடநெறி | பயிற்சி நிலையம் |
|---|---|
| (i) .............................. | (i) .............................. |
| (ii) .............................. | (ii) .............................. |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

..........................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

தங்களுடைய விண்ணப்பப்படிவத்தினை பாடநெறி தெரிவுசெய்யப்பட்ட மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளரின் முகவரிக்கு 2016.06.24 ஆந் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.

| பாடநெறி இல. | தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைகளுக்கேற்ப நடைபெறும் பாடநெறிகள் | பயிற்சிக் காலம் (மாதங்கள்) | NVQ Levels | கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| | **மோட்டார் வாகன திருத்துதல், பராமரித்தல்** | | | |
| 4 | தன்னியக்க மோட்டார் வாகன மின்னியலாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | 2,700 |
| 5 | சாரதிப் பயிற்சி (கனரக) வாகனம் | 3 | Non | 9,000 |
| 6 | சாரதிப் பயிற்சி (இலகுரக) வாகனம் | 3 | Non | 10,500 |
| 7 | தன்னியக்க மோட்டார் வாகன வர்ணம் பூசுபவர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 8 | மோட்டார் வாகன பொருத்துநர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 9 | மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | 1,000 |
| 10 | முச்சக்கர வண்டி தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | 1,000 |
| 12 | கட்டிட இயந்திர தொழில்நுட்பம் (ஸ்கேவேடர், பெக்கோ லோடர், மோட்டார் கிரேடர்) | 1 | Non | இயந்திரத் திற்கேற்ப மாறுபடும் |

| பாடநெறி இல. | தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைகளுக்கேற்ப நடைபெறும் பாடநெறிகள் | பயிற்சிக் காலம் (மாதங்கள்) | NVQ Levels | கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| | கட்டிட இயந்திர தொழில்நுட்பம் (ஸ்கேவேடர், பெக்கோ லோடர், மோட்டார் கிரேடர்) | 1 | 4 | இயந்திரத் திற்கேற்ப மாறுபடும் |
| | **மின்னியல் மற்றும் மின்னிணைப்பு** | | | |
| 15 | மின்னிணைப்பு - தேசிய சான்றிதழ் | 6 | 3 | free |
| 18 | மோட்டார் இயந்திர இயக்குநர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 19 | வானொலி, தொலைக்காட்சி திருத்துநர் | 18 | 4 | 4,000 |
| 22 | கையடக்க தொலைபேசி இயக்குநர் - தேசிய சான்றிதழ் | 6 | Non | free |
| | **தகவல் தொழில்நுட்ப, தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர்** | | | |
| 24 | கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் CISCO + A6 + சான்றிதழ் | 6 | 3, 4 | 12,000 |
| 24.2 | Adobe Certified Professional | 6 | 4 | 15,000 |
| 25 | கணினி மென்பொருள் கற்கைநெறி - தேசிய சான்றிதழ் (NVQ Level 4 in ICT) | 6 | 4 | 7,500 |
| 30A | கணினி மென்பொருள் கற்கைநெறி - தேசிய சான்றிதழ் (நாராஹேன்பிட்டி) | 6 | 4 | 20,000 |
| 31 | கணினி கிராபிக்ஸ் வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் (நாராஹேன்பிட்டி) | 6 | 4 | 12,500 |
| 32 | கணினி கிராபிக்ஸ் வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 4 | 10,000 |
| 32A | கணினி கிராபிக்ஸ் வடிவமைப்பாளர் - (வலது குறைந்தோருக்கானது) | 6 | 4 | free |
| | **ஹோட்டல் மற்றும் சுற்றுலாத்துறை** | | | |
| 33 | துறைசார் உணவக முகாமைத்துவம் - தேசிய சான்றிதழ் (நாராஹேன்பிட்டி) | 6 | 4 | 30,000 |
| 34 | உணவக முகாமைத்துவம் - தேசிய சான்றிதழ் | 6 | 4 | 6,000 |
| 35 | உணவக முகாமைத்துவம் - தேசிய சான்றிதழ் | 6 | 3 | 3,500 |
| 36 | அறை உதவியாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 3 | 3,500 |
| 37 | உபசாரகர் - உணவு மற்றும் பானங்கள் வழங்குநர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | 4,500 |
| | **மாணிக்கக்கற்கள் மற்றும் ஆபரணங்கள்** | | | |
| 38 | மாணிக்கக்கற்கள் பதிப்பாளர் | 6 | 3 | free |
| | **தனிநபர் மற்றும் சமுதாயம்** | | | |
| 41 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் | 3 | 4 | 7,000 |
| 42 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் (நாராஹேன்பிட்டி) | 3 | 4 | 20,000 |
| 43 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் | 3 | 4 | 3,000 |
| 44 | சிகை அலங்கார நிபுணர் - தேசிய சான்றிதழ் (நாராஹேன்பிட்டி) | 3 | 4 | 32,000 |

| பாடநெறி இல. | தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைகளுக்கேற்ப நடைபெறும் பாடநெறிகள் | பயிற்சிக் காலம் (மாதங்கள்) | NVQ Levels | கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 45 | சிகை அலங்கார நிபுணர் - தேசிய சான்றிதழ் | 3 | 4 | 4,000 |
| 46 | சிகை வெட்டும் நிபுணர் - தேசிய சான்றிதழ் | 3 | 3 | 4,000 |
| | **உணவுப் பொருள் தொழில்நுட்பம்** | | | |
| 48 | தொழில்சார் வெதுப்பக உற்பத்தியாளர் (நாராஹேன்பிட்டி) | 6 | 4 | 30,000 |
| 49 | வெதுப்பக உற்பத்தியாளர் | 6 | 4 | 6,000 |
| 50 | வெதுப்பக உற்பத்தியாளர் | 6 | 3 | 3,500 |
| 51 | பழவகை மற்றும் மரக்கறி வகைகள் தயாரித்தலும், ஒழுங்கமைத்தலும் | 6 | 3 | free |
| | **மரத்தளபாடம்** | | | |
| 52 | மரத்தளபாட தயாரிப்பு | 6 | Non | free |
| 54A | மரவேலை தொழில்நுட்பம் (வீட்டுத் தளபாடம்) | 6 | Non | free |
| 55 | மரவேலை தொழில்நுட்பம் (கட்டிடம்) | 6 | 3 | free |
| | **புடவை கைத்தொழில்** | | | |
| 56 | ஆடை வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 4 | 2,000 |
| 57 | ஆடை வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 3 | 3,000 |
| 57A | Fashion Design | 24 | 5, 6 | 50,000 |
| 58 | அதிவேக தையல் இயந்திர தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ் | 3 | 3, 4 | free |
| 59 | அதிவேக தையல் இயந்திர இயக்குநர் - தேசிய சான்றிதழ் | 3 | 3, 4 | free |
| 59A | அதிவேக தையல் இயந்திர இயக்குநர் | 6 | Non | free |
| 60 | ஆடை தைத்தல் (பெண்கள் மற்றும் குழந்தைகள்) தேசிய சான்றிதழ் | 6 | 2, 3, 4 | 1,500 |
| 61 | திரைச்சீலை வடிவமைப்பாளர் | 6 | Non | free |
| 62 | ஆடை தைத்தல் (ஆண்கள்) - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | 1,000 |
| 63 | ஆடை தயாரிப்பு, மேற்பார்வையாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 3 | 5,500 |
| 64 | தரக் கட்டுப்பாட்டாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 65 | தரக் கட்டுப்பாட்டாளர் - தேசிய சான்றிதழ் (Koggala) | 6 | 4 | 3,000 |
| 68 | Work study officer | 6 | 4 | 12,000 |
| | **உலோக மற்றும் அலுமினியப் பொறியியலாளர்** | | | |
| 71 | இயந்திரவியலாளர் (ஏற்றி இறக்கல்) | 6 | 3 | 3,500 |
| 72 | இயந்திரவியலாளர் (CNC இயந்திர இயக்குநர்), நாராஹேன்பிட்டி | 6 | 4 | 6,000 |
| 72A | இயந்திரவியலாளர் (CNC இயந்திர இயக்குநர்) - | 6 | 4 | 8,000 |
| 73 | இயந்திரவியலாளர் (CNC இயந்திர இயக்குநர்) - (ஏற்றி இறக்கல்) - தேசிய சான்றிதழ் (நியாகம/ வந்தாறுமுல்லை) | 6 | 4 | 8,000 |
| 78 | காய்ச்சி இணைப்பவர் - தேசிய சான்றிதழ் | 6 | 3 | free |
| 79A | காய்ச்சி இணைப்பவர் | 6 | Non | free |

| பாடநெறி இல. | தொழிற்பயிற்சி அதிகார சபையின் துறைகளுக்கேற்ப நடைபெறும் பாடநெறிகள் | பயிற்சிக் காலம் (மாதங்கள்) | NVQ Levels | கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| | **கட்டிடம் மற்றும் நிர்மாணம்** | | | |
| 75 | அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்ப வியலாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 75A | அலுமினியம் பொருத்துநர் | 6 | Non | free |
| 82 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியல் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 82.2 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (நீர்க்குழாய் பொருத்துநர்) | 6 | Non | free |
| 84 | நீர்க்குழாய் பொருத்துநர் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| 87 | உதவி கனிய உதவியாளர் - தேசிய சான்றிதழ் | 6 | 4 | 25,000 |
| 89 | சூழல் அலங்காரவியல் - தேசிய சான்றிதழ் | 6 | 3, 4 | free |
| | **அச்சிடல் மற்றும் பதிவிடல்** | | | |
| 90 | Litho இயந்திர இயக்குநர் - தேசிய சான்றிதழ் | 6 | 4 | 5,500 |
| 91 | Litho இயந்திர இயக்குநர் - தேசிய சான்றிதழ் | 6 | 3 | 3,200 |
| | **விவசாயமும் கால்நடை அபிவிருத்தியும்** | | | |
| 92 | கன்று நாட்டுதலும், பதனிடுதலும் | 6 | Non | free |
| 94 | பழங்கள் மற்றும் மரக்கறி பதனிடல் | 6 | Non | free |
| | **தோல் பொருள் உற்பத்தி** | | | |
| 97 | தோல் பாதணி உற்பத்தி | 6 | Non | free |
| | தோல் பொருள் உற்பத்தி | 6 | Non | free |
| 98 | இறப்பர் பொருள் உற்பத்தி | 6 | 4 | free |
| 99 | செயலாண்மை பயிற்சி நெறி | 9 | 4 | 3,500 |
| | **வேறு** | | | |
| 100 | தொழில்நுட்ப முகாமைத்துவ டிப்ளோமா (நாராஹேன்பிட்டி) | 6 | Non | 25,000 |

| இல. | மாவட்டம்/தே. தொ. ப. நிலையம் | பாடநெறி இல. |
|---|---|---|
| 1. | உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>பிரதான வீதி, நிந்தவூர்<br>தொலைபேசி இல: 067-2250196 | 24, 60, 25, 8, 10, 59, 64, 49, 4, 6, 75A, 84, 15, 52, 36, 35, 78, 37 |
| 2. | உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>இல. 108, ஸ்டேசன் வீதி,<br>வைரவப்புளியம்குளம், வவுனியா,<br>தொலைபேசி இல: 024-2221617 | 25, 60, 41, 82, 15, 45, 82.2, 75, 52, 31, 97, 24, 79A |

| இல. | மாவட்டம்/தே. தொ. ப. நிலையம் | பாடநெறி இல. |
|---|---|---|
| 3. | உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>APC வீதி, வந்தாறுமூலை,<br>மட்டக்களப்பு,<br>தொலைபேசி இல: 065-2240159 | 25, 41, 45, 9, 73, 78, 15, 52, 60, 82.2, 84, 75, 10, 55 |
| 4. | உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>நீதிமன்ற வீதி, மாங்குளம் வீதி,<br>முல்லைத்தீவு,<br>தொலைபேசி இல: 021-22290097 | 75, 8, 49, 41, 45, 24, 25, 60, 10, 82.2, 15, 62, 82 |
| 5. | உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>இல. 185, 5 ஆம் கட்டை,<br>A 9 வீதி, கிளிநொச்சி,<br>தொலைபேசி இல: 021-2285686 | 15, 8, 25, 60, 15, 10, 52, 24, 84, 78, 41, 44, 75, 12, 52 |
| 6. | உதவிப் பணிப்பாளர்,<br>மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம்,<br>இல. 12/1, KKS வீதி<br>(வீரசிங்கம் மண்டபம்),<br>யாழ்ப்பாணம்,<br>தொலைபேசி இல: 021-2227949 | 25. 75, 32, 24, 9, 10, 79A, 49, 82, 10, 36, 37, 34, 52, 41, 45, 82.2 |

பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளுவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமை தரம் 9 சித்தியடைந்திருத்தல் (Pass year 9)

* கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (மேசன்) தேசிய சான்றிதழ்
* கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (நீர்க்குழாய் பொருத்துநர்) தேசிய சான்றிதழ்
* சூழல் அலங்காரவியல் - தேசிய சான்றிதழ்
* மர பூ செதுக்குதல்
* தளபாட உற்பத்தி தொழில்நுட்பவியலாளர் (தளபாடம் - 06)
* சாரதிப்பயிற்சி (இலகுரக) வாகனம் 18 வயதுக்கு மேல்
* சாரதிப்பயிற்சி (பார) வாகனம் 21 வயதுக்கு மேல்
* தன்னியக்க வாகன தகர வேலை செய்பவர்
* தன்னியக்க வாகன வர்ணம் பூசுபவர்
* மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்
* முச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர்
* தொழில்சார் உணவு மற்றும் குடிபான சேவை
* தோல் பாதணிகள் வடிவமைப்பு
* அலுமினியம் பொருத்துநர்
* ஒட்டுவேலை செய்பவர் (06 மாதம்)
* வரைபட கலைஞர்
* அழகுக்கலை நிபுணர்
* கேச அழகுபடுத்துநர்
* அதிவேக தையல் இயந்திர இயக்குநர்
* அதிவேக தையல் இயந்திர திருத்துநர்
* தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்)
* தையல் (ஆண்கள்)
* திரைச்சீலை பிரிண்டிங்

**க.பொ.த. (சா.தரம்) 6 பாடங்களில் சித்திபெற்றோர் :**

* கட்டிட நிர்மாண முகாமைத்துவம்
* படவரைகலைஞர்
* மோட்டார் வாகன தொழில்நுட்பம்
* மோட்டார் வாகன மின்னியலாளர்
* மோட்டார் வாகன வாயு பொருத்துநர்
* மின்னியலாளர்
* மின் உபகரணங்கள் திருத்துநர்
* கையடக்க தொலைபேசி திருத்துநர்
* மின்னிணைப்பாளர் (6 மாதம்)
* சமையற்கலையாளர் (6 மாதம்)
* வீட்டு மின் உபகரணங்கள் திருத்துநர், மின்னியல் (6 மாதம்)
* அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்பம் (6 மாதம்)
* மின்னியல் மோட்டார் வைண்டிங் தொழில்நுட்பம்
* கட்டிட நிர்மாண, தொழில்நுட்பம் (மேசன், மற்றும் நீர்க்குழாய் பொருத்துநர்)
* கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர்
* கணினி கிராபிக்ஸ் வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ்
* கணினி கிராபிக்ஸ் வடிவமைப்பாளர் - (வலது குறைந்தோருக்கானது)

**க.பொ.த. (சா.தரம்) 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

கணினி வன்பொருள் தொழில்நுட்பம்
மோட்டார் வாகன தொழில்நுட்பம்
கணினி வடிவமைப்பாளர்
ஆடை வடிவமைப்பாளர்
ஆடைத்தொழிற்சாலை தரக்கட்டுப்பாட்டாளர்
ஆடைத்தொழிற்சாலை உற்பத்தி மேற்பார்வையாளர்
பப்ரிக் கட்டர்
பட வரைஞர்

**க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)

**க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

**க.பொ.த. (சா.தரம்) சித்தியுடன் க. பொ. த. (உ. தரம்) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல்**

கணிய அளவையாளர் சான்றிதழ் பாடநெறி

**க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

விவசாய இயந்திர தொழில்நுட்பம் - தேசிய சான்றிதழ்

காய்ச்சி இணைப்பவர்

பொருத்துநர் - தேசிய சான்றிதழ்

**க.பொ.த. (சா.தரம்) விஞ்ஞானம், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

*மின் உபகரண திருத்துநர்*

*வாயு உபகரண திருத்துநர் - தேசிய சான்றிதழ்*

**க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

*கணினி வன்பொருள் தொழில்நுட்பம்*

CISCO Computer Networking Course (CCNA)

Adobe *சான்றிதழ் பாடநெறி*

*கனிணி மென்பொருள் வடிவமைப்பாளர்*

*செயலாளாண்மை பாடநெறி*

**தேசிய தொழில் தகைமை தகவல் மற்றும் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறி**

*ஆங்கிலம், கணிதம் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) 6 பாடங்களில் சித்தியுடன்* ICT NVQ *4 சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உ. த.) சித்தியடைந்திருத்தல்*

**தேசிய தொழில் தகைமை தகவல் மற்றும் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறி**

*ஆங்கிலம், கணிதம் சித்தியுடன் க. பொ. த. (சா. த.) 6 பாடங்களில் சித்தி*

**தேசிய தொழில் தகைமை தகவல் மற்றும் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறி**

*க. பொ. த. (சா. த.) 6 பாடங்களில் சித்தி.*

Cosmetology **டிப்ளோமா பாடநெறி**

NVQ *4 சான்றிதழ் பெற்றிருத்தல்*

*விண்ணப்பப்படிவங்களை 2016.06.24 ஆந் திகதிக்கு முன் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க.*

*6-190*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித் தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு.**– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை–2016**

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. | வெள்ளி | 03.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.05.2016 |
| | | வெள்ளி | 10.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.05.2016 |
| | | வெள்ளி | 17.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.06.2016 |
| | | வெள்ளி | 24.06.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.06.2016 |
| **யூலை** | .. | வெள்ளி | 01.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.06.2016 |
| | | வெள்ளி | 08.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.06.2016 |
| | | வெள்ளி | 15.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.07.2016 |
| | | வெள்ளி | 22.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.07.2016 |
| | | வெள்ளி | 29.07.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.07.2016 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 05.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.07.2016 |
| | | வெள்ளி | 12.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2016 |
| | | வெள்ளி | 19.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2016 |
| | | வெள்ளி | 26.08.2016 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2016 |

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.